கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : ஸார், என்னுடைய பதிலில் வேறு விதமாகச் சொல்லவில்லை. எக்ஸ்டென்ஷன் அண்ட் இன்க்ரீஸ் ஆஃப் பெட் ஸ்ட்ரெங்த் தற்போது அவசர நிலைமையை உத்தேசித்து ஒத்தி வைக்கப்பட்டிருக்கிறது என்று தான் தெரிவித்தேன்.

திரு. வி. எஸ். எஸ். மணி : பெரிய பெரிய டவுன் பஞ்சாயத்திலேகூட மருத்துவ வசதி இல்லாமல் இருக்கிறது. கட்டாயமாக, டவுன் பஞ்சாயத்தில் ஒரு **(Primary Health Centre)** ப்ரைமரி ஹெல்த் செண்டராவது ஏற்படுத்த அரசாங்கத்தார் முன் வருவார்களா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : புதுக் கட்டடங்கள் கட்ட வேண்டாமென்று யோசனை செய்திருக்கிறோம். ரொம்பவும் அவசியமாக இருக்கிற இடத்தில் அதைப் பற்றி யோசனை செய்து ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் முன் வரும்.

Irrigation Schemes

* 395 *Q.*—SRI S. MADHAVAN : Will the Hon. the Minister for Works be pleased to state whether there is any proposal to establish investigation units for conducting investigation before taking up irrigation schemes for execution?

THE HON SRI V. RAMIAH : The Government have sanctioned the creation of an Irrigation Planning Circle with necessary staff for drawing up schemes for the most effective tapping and utilisation of all available sources of water, after a thorough research on a statewide basis.

திரு. எஸ். மாதவன் : தலைவர் அவர்களே, இந்த நீர்ப்பாசனத் திட்டங்களை எடுப்பதற்கு முன் ஒரு யூனிட்டிடம் பரிசீலனைக்கு விடவேண்டுமென்று செண்ட்ரல் வாட்டர் அண்ட் பவர் கமிஷன் ஆலோசனை கூறியிருக்கிறதா ?, அதைப்பற்றி நம் அரசாங்கத்தின் கருத்து என்ன ?

கனம் திரு. வெ. ராமைய்யா : அவர்கள் யோசனை வரும் வரையில் நாம் காத்திருக்கவில்லை. இன்வெஸ்டிகேஷன் செய்யவேண்டியது முறை என்ற காரணத்தினால், யூனிட் என்ற முறையில் இல்லாமல் மாகாணத்தில் இருக்கிற எல்லா நீர்ப்பாசன சோர்ஸ்களை முறையாகப் பரிசீலனை செய்யக் கூடிய முறையில் இன்வெஸ்டிகேஷன் சர்க்கிள் அமைத்திருக்கிறோம். மாகாணத்தில் பல இடங்களில் அவர்கள் பரிசீலனை செய்துகொண்டிருக்கிறார்கள். பட்ஜெட் விவாதத்தின்போதுகூட நான் அதைப் பற்றி வலியுறுத்திச் சொல்லியிருக்கிறேன். ஒரு சர்க்கிள் போதவில்லை என்றால் மேலும் ஒரு சர்க்கிள் போட அரசாங்கம் தயாராக இருக்கிறது.

புலவர் கா. கோவிந்தன் : பெரிய ஏரிகளிலிருந்து பிரியும் கால்வாய்கள் பல ஊர்களுக்குத் தண்ணீர் பாயக் கூடிய முறையில் இருக்கும் போது குடி மராமத்து வேலை நடைபெறாமல் இருக்கிற காரணத்தினால், கால்வாய்களை ஒப்படைக்கும்போது அப்-டு-டேட்டாக ஆக்கி புதுப்பித்துப் பின்னர்க் குடிமராமத்துக்கு ஒப்படைக்கப்படுமா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : இது இன்வெஸ்டிகேஷன் சர்க்கிள் பற்றிய கேள்வி. கனம் அங்கத்தினர் கேட்கக்கூடிய விவாதத்திற்குத் தனியாகக் கேள்வி போட்டால் பதில் சொல்லப்படும்.

திரு. எஸ். ஜே. ராமசாமி : இப்போது சிறு பாசனத் திட்டங்கள் என்ற முறையில் ஆங்காங்கு வேலை செய்ய விட்டு விடுகிறோம். சில இடங்களில் வேலையைச் செய்வதற்கு நாமினேட் செய்து விடுகிறார்கள். சில இடங்களில் காண்ட்ராக்ட்டுக்கு விடுவதற்கு டெண்டர் விடுகிறோம்.

27th March 1963]

நாமினேட் செய்வதில் பல தவறுகளும் குறைபாடுகளும் இருக்கின்றன என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா? அந்த மாதிரி நாமினேஷன் முறையை எடுத்துவிட்டு டெண்டர் கோர அரசாங்கம் முன் வருமா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : அதற்குத் தனியாகக் கேள்வி வேண்டும்.

திரு. ஆ. கு. சுப்பையா : பரிசீலனை செய்ய சர்க்கிள்கள் போடப் பட்டிருக்கின்றன என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். எங்கெங்கு அம்மாதிரியான சர்க்கிள்கள் போடப்பட்டிருக்கின்றன ?

கனம் திரு. வெ. ராமைய்யா : சர்க்கிள் ஒன்றுதான் மாகாணம் பூராவுக்கும். அவர்கள் எந்தெந்தத் திட்டத்தைப் பரிசீலனை செய்ய வேண்டுமோ அந்த இடங்களுக்கு அதிகாரிகளை அனுப்பி பரிசீலனை செய்கிறார்கள். ஆகையால் இது எந்த இடத்தில் இப்போது வேலை செய்கிறது என்று என்னால் சொல்ல முடியாது.

திரு. க. ர. நல்லசிவம் : இந்த இன்வெஸ்ட்டிகேஷன் சர்க்கிள் ஏதாவது ஒரு பெரிய திட்டம் சம்பந்தமாக இன்வெஸ்ட்டிகேஷன் வேலையைச் செய்து முடித்திருக்கிறதா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : தஞ்சை ஜில்லா காவிரி டெல்டா பாசனத்தைப்பொறுத்த வரையில் ப்ரிலிமினரி ரிப்போர்ட் முன் கொடுத்தது. பல இடங்களில் ப்ரிலிமினரி ரிப்போர்ட் கொடுக்கத் தயாராக இருக்கிறார்கள். ஆனால், அதனுடைய ஸ்ட்ரெங்த்தை அதிகப்படுத்தவேண்டுமென்று என்னுடைய நினைப்பு. சென்னை ராஜ்யத்தில் உள்ள பெரிய பாசனத் திட்டங்களையெல்லாம், காவிரி டெல்ட்டா, தாம்பரபரணி, வைகை இது போன்ற எல்லாத் திட்டங்களையும் பரிசீலனை செய்யவேண்டும். அதைச் சரிப்படுத்துவதற்காக இன்வெஸ்ட்டிகேஷனை வகைப்படுத்தவேண்டுமென்பது தான் என்னுடைய எண்ணம்.

Health Inspectors (Pay)

* 396 *Q.*—SRI K. S. VEERAPPA CHETTIAR : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether any request was made to the Government by the Health Inspectors through a resolution passed by the Conference of the Health Inspectors for the enhancement of their pay; and

(*b*) if so, the action taken thereon?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : (*a*) and (*b*) Yes, the matter is under consideration.

மருத்துவ மனைகளுக்கு மருந்துகள் வழங்குதல்

* **397.** கேள்வி.—**திரு. சி. ம. அம்பிகாபதி :** கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) அரசாங்க மருத்துவ மனைகளில் காலத்தில் **Indent** போட்டு அனுப்பியும் மருத்துவமனைக்கு மருந்துகள் தாமதித்து வருகிறதாக புகார்கள் வந்தனவா ?

(இ) அப்படி என்றால், இந்த குறையை தவிர்க்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது ?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : (*a*) No.

(*b*) Dose not arise.

MR. SPEAKER : Questions are over.